**HMOP 60 of 2024**

Date : 07.10.2025

ம.சா.1 : ஆறுமுகம் என்ற செல்வி

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நான் B.Com படித்துள்ளேன். நான் மும்பையில் படித்தேன். என் அப்பா மும்பையில் நியூஸ் பேப்பர் வியாபாரம் செய்து வந்தார். நான் என் தாய் தந்தையருக்கு ஒரே மகள் ஆவேன். சிறிய வயதிலேயே என்னை என் பெரியம்மா பெரியப்பாவிடம் என் அப்பா அம்மா வளர்க்க கொடுத்துவிட்டார்கள். அவர்களைதான் நான் அப்பா அம்மா என்று சொல்கிறேன். அவர்களுக்கு வேறு குழந்தை இல்லை என்றால் சரிதான். திருமணம் முடிந்த பின்பு விருந்துக்காக நானும் என் கணவரும் மும்பை சென்றோம் என்றால் சரிதான். விருந்துக்காக போன இடத்தில் 40 நாட்கள் மும்பையில் இருந்தோம் என்றால் சரிதான். மும்பையில் இருந்த கால கட்டத்தில் என் அப்பா அவர் செய்யும் பேப்பர் தொழிலுக்கு என் கணவரை உடன் அழைத்து சென்றார் என்றால் சரிதான். ஆனால் என் கணவர் அந்த தொழில் பிடிக்காமல் நான் தனியார் கம்பெனியில்தான் வேலைபார்ப்பேன் என்று சொன்னார் என்றால் சரியல்ல. எனது தந்தையிடம் ஒரு நாள் சென்று பார்த்து வருவதாக என்னிடம் கூறினார். ஒரு நாள் சென்று வந்த அன்று மாலை என் அப்பாவின் கீழ் என்னால் வேலை செய்ய முடியாது என்று என்னிடம் சொல்லியதாக அசல் மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவருக்கு வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க விருப்பம் இல்லை என்றால் சரிதான். நாங்கள் அவரை வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க சொல்லவில்லை. திருமணத்திற்கு முன்பாகவும் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்ற பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். என் கணவர் குவைத்தில் வேலை பார்த்தவர் என்றால் சரிதான். என் கணவருக்கு வெளிநாட்டில் தகுந்த வருமானத்தோடு வேலை பார்த்தார் என்றும் நாங்கள் என் கணவரை வற்புறுத்தி வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க சொல்லியது அவருக்கு பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எர்வாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளதில் அந்த புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் என்னிடம் இல்லை செல்போனில்தான் அந்த நகல் உள்ளது. எனவே தாக்கல் செய்யவில்லை. புகார்

மனுவில் என் கணவரை சேர்த்து வைக்க சொல்லி மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. அசல் மனுவில் போலிசார் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் நாங்கள் கொடுத்த புகார் மனுவிற்கு நாங்கள் சொல்வதை அவர்கள் கேட்கவே இல்லை. ஏர்வாடி காவல் நிலையத்தில் என் மீது தவறு இருப்பதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனக்கு அறிவுரை கூறி கணவரோடு சேர்ந்து இருக்க சொன்னார்கள் என்றால் சரிதான். ஆனால் என் கணவர் வரவே இல்லை. என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராகத்தான் இருந்தார் என்றும் நான்தான் அதற்கு முன்பு விவாகரத்து கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து என் கணவர் என்னை தனிக்குடித்தனம் அழைத்து சென்றால் நான் அவரோடு சேர்ந்து வாழ்கிறேன் என்று சொன்னேன் என்றால் சரிதான். அசல் மனுவில் கணவர் குடிப்பதாகவோ, குடித்துவிட்டு பிரச்சனை செய்வதாகவோ எந்த வாசகமும் இல்லை என்றால் அவர் குடித்துவிட்டு என்னை அடிப்பார். என் திருமண சமயத்தில் என் கணவர் என்ன வேலை பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அவர் குவைத்தில் வேலைபார்ப்பதாக என்னிடம் சொன்னார். திருமண சமயத்தில் சென்னை ஏர்போட்டில் கார்கோ மெயின்டெனெஸ் ல் வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. அசல் மனுவில் என் கணவர் ரூ.75 ஆயிரம் சம்பளம் வாங்கியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே அசல் மனுவில் என் கணவர் எவ்வளவு சம்பளம் வாங்குவதாக சொல்லமாட்டார் என்று சொல்லியிருப்பது ஏற்கதக்கதல்ல என்றால் அவராக சம்பளம் பற்றி என்னிடம் எதுவும் சொல்லமாட்டார் என்பதால் அவ்வாறு சொல்லியுள்ளேன். திருமண சமயத்தில் என் கணவர் சென்னையில் தனி அறை எடுத்து தங்கியிருந்தார் என்றும் அதை காலி செய்வதற்காகத்தான் சென்னைக்கு சென்றார் என்றும் ஆனால் நான் தவறுதலாக புரிந்து கொண்டு அவர் வெளிநாட்டிற்கு சென்று விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமண சமயத்தில் என் கணவர் சார்பில் எனக்கு 7 1/2 பவுன் தாலி செயினும், என் சகோதரனுக்கு மோதிரமும் போடப்பட்டது என்றால் சரிதான். திருமண சமயத்தில் எங்களிடம் இருந்து எந்த நகையும் அவர்கள் கேட்க வில்லை என்று மனுவின் 7 வது பாராவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மனுவில் பொதுவாக என் கணவர் என்னை அடிப்பார் என்று கூறியுள்ளேனே தவிர எந்த தேதி எத்தனை மணிக்கு என்று குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை என்றால் அவர் குடித்துவிட்டு வந்து அடிப்பார் எத்தனை மணி , எந்த தேதி என்பது எனக்கு நியாபகம் இல்லை. என்

குழந்தை பெயர் ரூப ஸ்ரீ என்பதாகும். என் குழந்தை பிறந்து 6 மாதத்தில் சாப்பாடு ஊட்டும் விழாவிற்கு குருவாயூர் செல்வதற்காக என் கணவர் 15 நாட்கள் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தார் என்றால் சரிதான். அந்த விழா சம்மந்தமாக என் அப்பா அம்மாவிற்கு என் கணவர் போன் மூலம் தகவல் சொன்னார் என்றால் சொல்லவில்லை. என் குழந்தைக்கு பிறந்த சமயத்தில் செயின், 2 வளையல், மோதிரம் மாமனார் மாமியார் போட்டார்கள் என்றால் சரிதான். அந்த நகைகள் என் கணவர் வீட்டில் உள்ளது. என் மாமனார் மாமியார் மற்றும் கணவர் குழந்தை மீது அதிக பாசம் கொண்டதால்தான் குழந்தைக்கு தங்களின் தகுதிக்கு மீறி தங்கம் போட்டுள்ளார்கள் என்றும் அவர்களுக்கு பெண்குழந்தை என்று ஓரங்கட்டி வசை பாட அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா அம்மா ஜூலை 2023 ம் ஆண்டு என்னையும் என் குழந்தையையும் அழைத்து சென்று விட்டார்கள் என்றால் சரிதான். என் மாமியார் கெட்டவார்த்தைகள் போட்டு என்னிடம் சண்டை போட்டதால் என்னை கூட்டி சென்றனர். அந்த சமயத்தில் என் கணவர் வீட்டில் இல்லை என்றால் சரிதான். வெளி நாட்டில் இருந்தார். போன் செய்து நான் தகவல் கூறிய போது அவரும் என்னை கெட்ட வார்த்தையால் பேசி சண்டை செய்தார். ஏப்ரல் 2024 ம் ஆண்டு என் கணவர் வீட்டினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் வந்து என்னை அழைத்து செல்வதற்காக வந்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் மட்டும்தான் வந்தார். குழந்தையை கீழே தூக்கி வீசி என் வீட்டுக்காரர் சண்டை போட்டார். அசல் மனுவில் பத்தி 19 ல் நிறைய நபர்களை அழைத்து வந்து பிரச்சனை செய்தார்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பிரச்சனைக்கு பின்பு என் அம்மாதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும் என் பெற்றோர்கள்தான் நாங்கள் சேர்ந்து வாழ்வதை விரும்பவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் ஏர்வாடி காவல் நிலையத்தில் என்னை என் கணவரோடு சேர்ந்து வாழ கூறி அறிவுரை கூறினார்கள் என்றால் சரிதான். என்னை நன்றாக வைத்திருந்தால் நான் தாயார் வீட்டிற்கு வந்திருக்க மாட்டேன். என் அப்பா அம்மா இருவரும் என் கணவரை வீட்டோடு மாப்பிள்ளையாக்க வேண்டும் என்ற முயற்சியில் என் தந்தை செய்யும் பேப்பர் தொழிலை செய்ய வற்புறுத்தியது மட்டுமே எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல. என் அப்பா அம்மாவிற்கு அவர்களுடன் நான் இருக்கவேண்டும் என்ற ஆசையால் என் கணவருடன் சேர்ந்து வாழ விடாமல் தடுக்கிறார்கள் என்றால்

சரியல்ல. என் கணவர் தற்சமயம் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் என்னை தனிக்குடித்தனம் அழைத்து போக தயாராக இருக்கிறார் என்றால் அவர்கள் என்னை கொன்று போடுவார்கள் எனவே நான் தனிக்குடித்தனம் செல்லவிரும்பவில்லை. என் மாமியார் மாமனார் தலையணையை முகத்தில் வைத்து கொல்ல முயற்சி செய்தனர். மேற்கண்ட குற்றச்சாட்டுகள் எதுவும் என் அசல் மனுவில் சொல்லவில்லை என்றால் இதையெல்லாம் எழுதமுடியாது என்பதால் சொல்லவில்லை. என் கணவர் என்னையும் குழந்தையையும், நல்ல முறையில் பராமரிக்க விரும்புகிறார் என்றால் சரியல்ல. அசல் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியலல.